# அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் சைவசமயத்தின் சமகாலப் போக்குகள்

**சந்தோசா.தி**

**ஆய்வுச்சுருக்கம்:**

மனிதகுல வரலாற்றில் சமயங்கள் தனித்துவமான இடத்தினைப் பெறுகின்றன. இவை மனிதர்களின் வாழ்வியலில் மிகவும் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. அந்தவகையில் சைவ சமயமும் உலகின் தொன்மையான மற்றும் வளமான சமயங்களுள் ஒன்றாகும். இது சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். ஈழத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சைவ வழிபாடுகள் நிலவியமைக்கான ஆதாரங்கள் உள்ளன. அக்காலத்தில் சைவம் ஈழம் முழுவதும் பரவிக் காணப்பட்டது. கி.மு. 09ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையின் கிழக்கில், அக்கரைப்பற்று (பழைய பெயர் – கருங்கொடித்தீவு) எனும் பிரதேசத்திலும் சைவம் மிகவும் செழிப்புற்றுக் காணப்பட்டது. எனினும் காலப்போக்கில் இந்நிலை மாறத் தொடங்கியது. குறிப்பாக கடந்த நூற்றாண்டிலிருந்து இப்பிரதேசத்தில் சைவ சமயத்தின் நிலைத்திருப்பு சரிவடைந்து செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான தொன்மையான சைவ வரலாற்றினை உடைய ஒரு பிரதேசத்தில் சைவத்தின் தொடர்ச்சியான நிலைத்திருப்பினை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில், சமகாலத்தில், சைவத்தின் செல்நெறியையும் அது எதிர்கொள்ளும் சவால்களையும் அதற்கு மாற்றாக சைவ சமயிகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையும் அறிந்து மதிப்பிடுதல் ஆய்வின் நோக்கமாகும். குறித்த ஆய்வில் “சமகாலம்“ எனக் கருதப்படுவது கடந்த பத்து வருட காலப்பகுதி (அதாவது 2013 தொடக்கம் 2023 வரை) ஆகும்.

**திறவுச்சொற்கள்:** அக்கரைப்பற்று, சைவம், ஆலையடிவேம்பு, சமகாலம், வழிபாடு

சைவ சித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thirusanthosa7@gmail.com